1990 மே 10]

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு தலைவர் அவர்களே, திருவண்ணாமலை நகரத்தில் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் ஹோட்டல் மற்றும் தங்கும் விடுதி கட்டுவதற்கான பரிசீலனை இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் இந்த ஆண்டு அப்படி எத்தனை இடங்களில் தங்கும் விடுதிகள கட்டப் போகிறார்கள்? அதற்கான திட்டம் உள்ளதா? அதுபோல கடந்த ஆண்டு நீங்களே, உங்கள் தலைமையிலே பார்வையிட்டீர்கள் (மணியடிக்கப்பெற்றது).....

மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் பல்வேறு மாவட்டத் தலை நகரங்களில்—புதுகோட்டையிலும், தூத்துக்குடியிலும், நெல்லையிலும், சேலத்திலும் கட்டுவதற்கான திட்டம் இருக்கிறது. பழனியில் 'வே—சைடு ஃபெசிலிட்டீஸ்' என்று சொல்கிற அளவிலே ஒரு ரெஸ்டாரன்ட் கட்ட இருக்கிறோம். அதற்கான இடத்தையும் தேர்வு செய்து விட்டோம். தங்கும் விடுதி கட்டுவதற்கு ஒரு இடம் தரப்பட்டு இருக்கின்றது. அது தாழ்வான இடம். அதை மண் போட்டு நிரப்ப வேண்டும். அடுத்த கட்டமாக ஓராண்டு கழித்து அங்கு தங்கும் விடுதி கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படும். ஆனால் ஏற்கெனவே கோவில் மூலமாக பல்வேறு விடுதிகள் இருக்கின்றன. அவைகளையும் நன்றாகப் பராமரித்து பயணிகள் தங்குவதற்கு வேண்டிய வசதிகளைச் செய்ய, பழனி ஆண்டவர் கோவில் மூலமாக அந்த வசதிகளைச் செய்து தருவோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பக்தி மார்க்க நிகழ்ச்சிகளில் அதிகாரிகள் பங்கெடுத்தல்.

*8501 திரு. கே. ரமணி:

மாண்புமிகு இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) இந்து மதக் கோவில்களில் பக்தர்கள் அல்லது பெரிய மனிதர்கள் தனிப்பட்ட முறையில் நடத்துகிற பலதரப்பட்ட பக்தி மார்க்க நிகழ்ச்சிகளில் அரசு அதிகாரிகள் பங்கெடுத்துக் கொள்ள அரசு அனுமதியளித்துள்ளதா?

(ஆ) இல்லையெனில், அதிகாரிகள் தாங்களாக அப்படி பங்கேற்பதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க உள்ளது?

மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் நடத்தை விதியில் இந்துசமய திருக்கோயில் நிகழ்ச்சிகளில் அரசு அதிகாரிகள் கலந்து கொள்வதை தடைசெய்யும் விதி எதுவும் இல்லை.

இம்மாதிரி நிகழ்ச்சிகளில் அரசு அதிகாரிகள் கலந்து கொள்வது அவர்களுடைய மத நம்பிக்கையையும் விருப்பத்தையும் பொருத்த தாகும்.

திரு. யூ.கே. வெள்ளிங்கிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலுரையில் மத நம்பிக்கையின் அடிப்படையில் செல்லலாம் என்று சொன்னார்கள். இந்தக் கேள்வியின் மூலமாக அரசு அதிகாரிகள், அரசு நடத்தக்கூடிய நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளலாம். ஆனால் தனியார்கள் நடத்தக் கூடிய தினசரி நடக்கக் கூடிய நிகழ்ச்சிகளில் எல்லாம் அதிகாரிகள் கலந்துக்கொள்வதன் மூலமாக அரசு பணி பாதிக் கப்படும் ஒரு சூழ்நிலை தான் இருக்கிறது. எனவே இனிமேலாவது அது தடைசெய்யப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, அறநிலையத் துறையைப் பொருத்தமட்டிலும் தான் நான் பதில் சொல்ல முடியும். அறநிலையத் துறை அதிகாரிகள் கோவில் நிகழ்ச்சிகளிலே—அதைத் துறை நடத்தினாலும் சரி, தனியார் நடத்தினாலும் சரி, அதில் கலந்துகொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது.

திரு. உ.ரா. வரதராசன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மத நம்பிக்கை உள்ளவர்கள் அதிகாரிகளாக இருந்தாலும் மற்றவர்களாக இருந்தாலும், தனிப்பட்ட முறையில் அவர்கள் பக்தி மார்க்கங்களில் ஈடுபடுவது, விழாக்களிலே கலந்துகொள் வதிலே யாருக்கும் எந்த ஆட்சேபனையும் இருக்க முடியாது. ஆனால் தனிப்பட்டவர்கள் நடத்துகிற விழாக்களிலே அரசு சார்பிலே, இந்து சமய அறநிலையத் துறையில் மட்டுமல்ல மற்ற துறையில் உள்ள சில அதிகாரிகளும் அதிகாரப்பூர்வமாகப் பங்கேற்றுக்கொள்வதும், அங்கே அவர்களுக்கு பூர்ண கும்ப மரியாதை, பட்டுப் பீதாம்பரம் எல்லாம் கொடுக்கப்படுவதும்—இவை எல்லாம் ஒரு மத சார்பற்ற அரசினுடைய அதிகாரிகள் செய்யக்கூடிய காரியமாக இல்லை. ஆகவே, இதுபோன்று மதச் சார்பற்ற அரசினுடைய கொள்கைகளை அமல் படுத்த வேண்டிய முறையிலே அரசு ஊழியர்களுடைய விதிகளிலேயே ஒரு திருத்தம் கொண்டு வந்து அந்த அதிகாரிகள் இப்படி அதிகாரபூர்வமாகக் கலந்து கொள்வதைத். தடுப்பதற்கு வகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

9-30 மணி

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவரவர்களே, இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டியது முதலமைச்சர் என்று நான் கருதுகின்றேன்.

[1990 மே 10]

திரு. இரா. மோகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதச் சார்புள்ள விழாக்களுக்கு அறநிலையத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் சென்று கலந்துகொள்வதிலே எந்தப் பிரச்சினையும் இல்லை. அவர்கள் நிச்சயமாகக் கலந்து கொள்ள வேண்டும்; அமைச்சரும் கலந்து கொள்ள வேண்டும். ஆனால், சாதாரணமாக ஒரு ஊரிலே கோயிலுக்கு அந்தக் தேரை இழுக்கிறார்கள் என்றால் மாவட்டக் கலெக்டர் போய் அந்தக் கயிறு வடம் பிடித்து இழுக்கிறார், டி.ஐ.ஜி., எஸ்.பி., இப்படிப்பட்ட ரேங்கிலே இருக்கக்கூடிய பெரிய அதிகாரிகள் போய் அந்தக் கயிற்றை இழுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆக, இதனாலே ஒரு மதத்தினுடைய ஓர் நிகழ்ச்சியிலே கலந்து கொள்வது மற்ற மதத்துக்காரர்கள் அழைத்தால் கலந்து கொள்ளப் போகிறார்களா என்ற பல பிரச்சினைகள் வருகின்றன. ஆகவே, பெரிய பொறுப்பிலே இருக்கக்கூடிய அதிகாரிகள் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளிலே அவர்கள் தனிப்பட்ட மத எண்ணங்கள் இருந்தால், அவர்கள் தனியாகக் கோயிலுக்குப் போவதிலே பிரச்சினை கிடையாது. ஆனால் ஒரு பொதுவாகப் போய் அந்த வடம் பிடித்து இழுப்பது, இந்தக் கயிறு இழுப்பது போன்ற நிகழ்ச்சிகளிலே கலந்து கொள்ளக் கூடாது என்ற ஒரு பொதுவான சட்டத்தை நம்முடைய தமிழக அரசு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவரவர்களே, சில இடங்களிலே—குறிப்பாகச் சொல்லப்போனால், திருவாரூரிலே தேர் ஓட்டம் நடைபெற்றபொழுது அங்கே ஒரு குழு அமைக்கப்பட்டது. கலெக்டருடைய தலைமையிலே—அங்கே தனிப்பட்டவர்களுடைய மட்டத்திலே இல்லாமல், அதிகாரிகள் மட்டத்திலே—கலெக்டர் தலைமையிலே ஒரு குழு அமைக்கப்பட்டது, அந்தக் குழுவிலே எஸ்.பி.யும் இருந்தார். ஆகவே, பணி காரணமாக அந்த இடத்திற்கு அவர்கள் வந்தார்கள் என்று நான் கருதுகின்றேன்.

திரு. சு. குருநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டவனுக்கு முன் அனைவரும் சமம் என்று பெரியோர்கள் சொல்கிறார்கள். ஆனால், கோயிலிலே நடைபெறுகின்ற சில திருவிழாக்களில் சிலபேர்களுக்கு மட்டும் கோயில்களில் பரிவட்டம் கட்டுவதைப் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் இருக்கின்ற காரணத்தால் பல்வேறு தகராறுகள் பல்வேறு இடங்களிலே வருகின்றன. இதை நிறுத்துவதற்கு அரசு முயற்சியெடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவரவர்களே, கோயில்களிலே அனைவரும் சமமாக நடத்தப்பட வேண்டுமென்ற ஒரு கொள்கைக் குறிப்பு ஏற்கனவே நம்முடைய அரசு மட்டத்திலே இருக்கின்றது.